இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி


Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 129 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 03 – புதன்கிழமை 18 டிசம்பர் 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 129 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 03 - Wednesday 18 December 2024 - Madurai 12 Pages ₹ 5.00

## பலத்த எதிர்ப்பு மற்றும் கண்டனங்களை அடுத்து "ஒரே நாடு ஒரே தேர்தல்" மசோதா:

# நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (17.12.2024) தலைமைச் செயலகத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ள திருமதி பெ. அமுதா, முனைவர் அதுல் ஆனந்த், திருமதி காகர்லா உஷா, செல்வி அபூர்வா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.

## ஒன்றிய பா.ஜ.க. அரசு அறிவிப்பு!

**புதுடெல்லி, டிச. 18 -**

**எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி நாடாளுமன்றத்தில் "ஒரே நாடு ஒரே தேர்தல்" சட்டமசோதாவை ஒன்றிய அரசு தாக்கல் செய்தது. பின்னர் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையடுத்து அம்மசோதா நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்துக்கும், நாடு முழுவதும் அனைத்து மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. நாட்டின் பன்முகத்தன்மையையும் ஜனநாயகத்தையும் கொன்றுவிடும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எச்சரித்துள்ளார்.

அதிபர் தேர்தலை போன்ற ஒரு நடைமுறையை கொண்டுவரும் உள்நோக்கத்துடன் ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒரே நாடு ஒரே தேர்தல் முறையை கொண்டு வருவதாகவும், இது நமது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்றும் முதலமைச்சர் குற்றம்சாட்டியுள்ளார்.

இதனிடையே, மசோதாவுக்கு தொடக்க நிலையிலேயே எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட 'இந்தியா' கூட்டணி கட்சிகள் சார்பில் நாடாளுமன்றத்தில் நோட்டீஸ் அளிக்கப்பட்டது.

மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி ஆகியோர் நோட்டீஸ் அளித்தனர். இந்நிலையில், எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, மக்களவையில் நேற்று "ஒரே நாடு ஒரே தேர்தல்" மசோதாவை ஒன்றிய அரசு தாக்கல் செய்தது. ஒன்றிய அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் மசோதாவை தாக்கல் செய்தார்.



நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு அனுப்ப வேண்டும் என்று தி.மு.க. வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவுக்கு காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

### தி.மு.க. கண்டனம் டி.ஆர்.பாலு பேச்சு!

இந்த மசோதா மீது உரையாற்றிய மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, போதிய பெரும்பான்மை இல்லாதபோது நாடாளுமன்றத்தில் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவை கொண்டு வர எப்படி அனுமதி அளிக்கப்பட்டது என வினவினார். இந்த மசோதா அரசியலமைப்பு சாசனத்துக்கும், கூட்டாட்சிக்கும் எதிரானது என்று அவர் தெரிவித்தார். அறிமுக நிலையிலேயே தி.மு.க. இதனை எதிர்ப்பதாகவும், மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு அனுப்ப வேண்டும் என்றும் டி.ஆர். பாலு வலியுறுத்தினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

முன்னதாக ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்த 13ஆம் தேதி அன்று இரவே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஜனநாயக விரோதத் திட்டம் இது என்று கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். அதுமட்டுமன்றி நேற்று முன்தினம் (16.12.2024) தேர்தல் சீர்திருத்தம் என்ற போர்வையில் திணிக்கப்படும் ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டம் பா.ஜ.க.வின் தோல்விகளை மறைக்கும் முயற்சி என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தார்என்பதுகுறிப்பிடத்தக்கது.

### காங்கிரஸ் கண்டனம்!

ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா அரசியல் சாசனம் மற்றும் கூட்டாட்சி தத்துவம் மீதான தாக்குதல் என்று காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அரசமைப்புக்கும், அரசியல் கட்டமைப்புக்கும் இந்த மசோதா எதிரானது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என அக்கட்சியின் எம்.பி., மணிஷ் திவாரி வலியுறுத்தியுள்ளார்.

### கூட்டுக்குழு விசாரணை அமித்ஷா அறிவிப்பு!

ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா நாட்டின் பன்முகத்தன்மையை சீர்குலைக்கும் செயல் என சமாஜ்வாதி கட்சி எம்.பி., தர்மேந்திர யாதவ் குற்றம்சாட்டியுள்ளார். எனவே மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தேர்தல் சீர்திருத்தம் அல்ல என்றும், எனவே மசோதாவை ஒருபோதும் ஏற்க முடியாது என்றும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. அனைத்து அதிகாரத்தையும் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைத்து விட முடியுமா என அக்கட்சியின் எம்.பி., கல்யாண் பானர்ஜி ஒன்றிய அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ளார். இந்நிலையில், எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பை அடுத்து, மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு அனுப்புவதாக ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அறிவித்தார்.

## ஈரோடு மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு!

### நாளை நடைபெறுகிறது!

ஈரோடு, டிச. 18 –

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்டம்தோறும் கள ஆய்வு செய்து அரசு விழாவில் பங்கேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறார். கட்சி நிர்வாகிகளை சந்தித்து கட்சி வளர்ச்சி குறித்து பேசி வருகிறார்.

அதன்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈரோடு மாவட்டத்துக்கு வருகிற 19ந்தேதி, 20ந் தேதி என 2 நாட்கள் சுற்றுப்பய ணம் மேற்கொள்கிறார். 19ந் தேதி (வியாழக்கிழமை) சென்னையில் இருந்து காலை 10 மணி அளவில் இருந்து விமானம் மூலம் கோவை வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அங்கிருந்து சாலை வழியாக ஈரோட்டுக்குச் செல்கிறார். அங்கு 20க்கும் மேற்பட்ட இடங்களில் முதலமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்படுகிறது. பின்னர் மதியம் 1 மணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈரோடு விருந்தினர் மாளிகைக்கு சிறிது ஓய்வு எடுக்கிறார்.

பின்னர் மாலை 5 மணி அளவில் மேட்டுக்கடை பகுதியில் தங்கம் மகாலில் நடக்கும் தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார். மாலை 6 மணி அளவில் தி.மு.க. கொள்கை பரப்பு இணைச்செயலாளர் சந்திரக்குமார் இல்ல திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்கிறார். இரவில் ஈரோடு விருந்தினர் மாளிகையில் தங்குகிறார்.

அதைத்தொடர்ந்து 20ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு ஈரோடு சோலார் புதிய பஸ் நிலையத்தில் நடக்கும் அரசு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார். ஏற்கனவே முடிக்கப்பட்ட வளர்ச்சித்திட்ட பணிகளை திறந்து வைப்பதுடன், புதிய வளர்ச்சித்திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கிறார்.

ஈரோடு சூரம்பட்டி நால்ரோட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பில் ரூ.16 கோடி செலவில் கட்டப்பட்ட 6 தளங்கள் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகம், ஈரோடு பஸ் நிலையத்தில் புதிதாக கட்டப்பட்ட வணிக வளாகம், நான்கு வழிச்சாலையாக விரிவுபடுத்தப்பட்ட வெளிவட்ட சுற்றுச்சாலை (ரிங்ரோடு), ஈரோடு வைராபாளையத்தில் அமைக்கப்பட்ட கூடுதல் உரக்கிடங்கு, சென்னிமலையில் சுத்திகரிப்பு நிலையம் போன்றவற்றை பொதுமக்களின் பயன்பாட்டுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

சோலாரில் ரூ.18 கோடியே 48 லட்சம் செலவில் கட்டப்பட உள்ள காய்கறி, பழங்கள், மளிகை என மொத்த சந்தை வளாகம் கட்டும் பணியை தொடங்கி வைக்கிறார். தொடர்ந்து பல்வேறு துறைகளின் சார்பில் சுமார் 50 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

முதலமைச்சர் வருகையை முன்னிட்டு அமைச்சர் முத்துசாமி, மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா தலைமையில் அதிகாரிகள் விழாவுக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

## 'தெனாலி'யின் பயப் பட்டியலை விட பழனிசாமியின் பயப் பட்டியல் பெரியது!

# பா.ஜ.க.வுக்கு அச்சப்படும் கோழை பழனிசாமி!

## நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அறிக்கை!

**சென்னை, டிச. 18 -**

**"தெனாலி'யின் பயப் பட்டியலை விட எடப்பாடி பழனிசாமியின் பயப் பட்டியல் பெரியது என்றும், பா.ஜ.க.வுக்கு அச்சப்படும் கோழை பழனிசாமி என்றும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

பா.ஜ.க.வோடு கள்ளக் கூட்டணி வைத்திருக்கும் அ.தி.மு.க., அதனை மணிக்கொரு முறை நிரூபித்துக் கொண்டே இருக்கிறது. அ.தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் தி.மு.க. அரசுக்கு எதிரான தீர்மானங்களுக்கு 'கண்டனம்' என்றும், மோடி அரசுக்கு எதிரான தீர்மானங்களில் 'வலியுறுத்தல்' என்றும் சொல்லி 'கோழைசாமி' பா.ஜ.க. பாசத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பழனிசாமிக்கு மோடி என்றால் பயம், அமித்ஷா என்றால் பயம், அமலாக்கத் துறை பயம், சி.பி.ஐ. பயம், வருமானவரித் துறை பயம், ஆளுநர் பயம், ரெய்டு பயம், சின்னம் பறிபோய்விடுமோ என்று பயம்!

இப்படி பழனிசாமியின் பயப் பட்டியலும் "எல்லாம் பயம் மயம்" எனச் சீனப் பெருஞ்சுவர் போல் நீள்கிறது.

புலிப்பாண்டியென அழுத்தம் கொடுக்கும் பழனிசாமி அவர்களே...

★ குடியுரிமை திருத்தச் சட்டத்தை அ.தி.மு.க. ஆதரித்து வாக்களிக்காமல் இருந்திருந்தால், அந்த மசோதா மாநிலங்களவையில் தோல்வி அடைந்திருக்கும்.

★ நாடாளுமன்றத்தில் சுரங்கம் மற்றும் கனிமத் திருத்த மசோதாவிற்கு அ.தி.மு.க. எம்.பி. தம்பிதுரை ஆதரவளித்து, டங்ஸ்டன் சுரங்கத்திற்கு மறைமுக ஆதரவு.

★ அம்மையார் ஜெயலலிதா எதிர்த்த தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், உதய் மின் திட்டத்துக்கெல்லாம் மோடிக்குப் பயந்து ஆதரவு.



★ முத்தலாக் தடை சட்டத்திற்கு மக்களவையில் ஆதரவு மாநிலங்களவையில் எதிர்ப்பு என அ.தி.மு.க. இரட்டை வேடம் போட்டது.

★ முஸ்லிம்களைஅவதூறாகப் பேசிய அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி சேகர் குமாரை பணி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானத்தை 2024-இல் மாநிலங்களவையில் கொண்டு வர ஆதரித்துக் கையெழுத்திட மறுத்தது.

★ நாடு விடுதலை அடைந்த நாளில் இருந்த வழிபாட்டுத் தலங்களை வேறு மதங்களுக்கு மாற்ற முடியாது எனும் மத வழிபாட்டு தலங்கள் சட்டம் 1991க்கு எதிராக பா.ஜ.க. நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் நிலையில், கருத்து தெரிவிக்காமல் அ.தி.மு.க. பதுங்கியது.

★ 'நான் ஒரு விவசாயி' என்று சொல்லிக் கொண்டே மோடி அரசு கொண்டு வந்த 3 வேளாண் சட்டங்களை பலமாக ஆதரித்தது மட்டுமின்றி அவற்றை எதிர்த்தவர்களையும் கடுமையாக விமர்சித்த விஷவாயு நீங்கள்.

★ மாநிலங்களின் சுயாட்சிக்கு எதிரான ஒரு நாடு ஒரு தேர்தல் மசோதாவையும் ஆதரிக்கும் பா.ஜ.க.வின் உன்னத தோழன் அ.தி.மு.க..

இப்படி மோடி அரசின் மக்கள் விரோத சட்டங்களையும் திட்டங்களையும் ரெய்டுக்கு பயந்து ஆதரித்த கோழைதான் பழனிசாமி. இந்த பயந்தாங்கொள்ளி பழனிசாமிதான் அ.தி.மு.க. பொதுக்குழுவில் வீராவேசமாகப் பேசுவது போல், காற்றோடு கத்தி சண்டை போடுகிறார்.

பெட்ரோல் விலை உயர்வு, காஸ் விலை உயர்வு என என்றைக்காவது கண்டித்து பழனிசாமி அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறாரா?

"அத்தனை பேரும் எதிர்பார்க்கின்ற கூட்டணி அமையும். 2026ல் அ.தி.மு.க. மீண்டும் அரியணை ஏறும்" என்றெல்லாம் பொதுக்குழுவில் ஆக்ரோஷமாகப் பேசியிருக்கிறார். கோழைக்கு ஆசை என்ன? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## காற்றழுத்த தாழ்வுநிலை உருவானது!

### தமிழகத்தில் கனமழை!

*சென்னை, டிச. 18 -*

*வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இதன் காரணமாக, சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் இன்று முதல் 2 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-*

*தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவிய வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது.*

*இது, அடுத்த 2 நாட்களில் மேலும் வலுப்பெற்று, மேற்கு, வடமேற்கு திசையில், தமிழக கடலோர பகுதிகளை நோக்கி நகரக் கூடும். இதன் காரணமாக இன்று முதல் 22ம் தேதி வரை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழை நீடிக்கும். குறிப்பாக, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் கன முதல் மிக கனமழையும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள், காரைக்கால் பகுதிகளில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது.*

*இன்று (டிச.18) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் கன முதல் மிக கனமழையும், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர், அரியலூர், மயிலாடுதுறை மாவட்டங்களிலும், காரைக்காலிலும் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும். 19ம் தேதி சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.*